செய்தி வெளியீடு எண்: 175/09 நாள் : 20.3.2009

## மாநில தேர்தல் ஆணையர் திரு.நரேஷ்குப்தா, இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து வீடியோ கான்பரன்சீங் மூலம் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களுடன் ஆய்வு செய்தார்.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலையொட்டி நடைபெற்று வரும் தேர்தல் பணிகள் குறித்துமாநில தேர்தல் ஆணையர் திரு.நரேஷ்குப்தா, இ.ஆ.ப., அவர்கள் வீடியோ கான்பரன்சிங் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு செய்தார். அதன்படி, வேலூர் மாவட்டத்தில் தேர்தல் பணிகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களிடம் ஆய்வு செய்தார்.

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வேலூர் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் அரக்கோணம் நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து தமிழக தேர்தல் ஆணையர் திரு.நரேஷ்குப்தா, இ.ஆ.ப., அவர்களுக்கு வீடியோ கான்பரன்சிங் மூலம் தெரிவிக்கையில்:

வேலூர் மற்றும் அரக்கோணம் பாராளுமன்றத்திற்கான தேர்தல் பணிகள் நடைபெ்றறு வருகிறது. தேர்தல் விதிமுறைகள் கடைபடிக்கப்பட்டு வருகிறது. தேர்தலில் வாக்காளர்கள் வசதிக்காக வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. மாவட்ட முழுவதும் 2 ஆயிரத்து 727 வாக்கு சாவடிகள் உள்ளது. அனைத்து வாக்காளர்கள் உள்ள மையங்களில் அதிக வாக்காளர்கள் இருந்தால் அந்த வாக்கு பதிவு மையங்களை இரண்டாக பிரித்து அதே இடத்தில் அமைக்கவும் மாநில தேர்தல் ஆணையர் திரு.நரேஷ்குப்தா அவர்கள் கேட்டுக் கொண்டார். 27 வாக்கு சாவடி மையங்கள் உள்ளது. அவற்றை பிரித்து அதே இடத்தில் வாக்கு பதிவு செய்யும் மையம் அமைக்கப்படும்.

வேலூர் மாவட்டத்தில் வாக்காளர்கள் வசதிக்காக பழைய கட்டிடங்களிலுள்ள வாக்கு பதிவு மையங்கள், இடிந்த நிலையில் உள்ள வாக்கு பதிவு மையங்களை அதே மையத்தில் அனைவருக்கு கல்வி திட்டத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டிடங்களில் மாற்றி அமைக்கப்படும். அதன்படி 108 மையங்கள் புதிய கட்டிடத்திலும் 24 இடிந்த கட்டிடங்களும் புதிய கட்டிடத்தில் வாக்கு பதிவு மையம் அமைக்கப்படும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

வேலூர் மாவட்டத்தில் 141 வாக்கு சாவடிகள் பதற்றம் நிறைந்த வாக்கு சாவடிகளாக காவல்துறையினரால் கண்டறியப்பட்டுள்ளது. அந்த வாக்கு சாவடிகளில் மத்திய, மாநில அலுவலர்களைக் கொண்டு வாக்குச் சாவடிக்கு வெளிப்பகுதியில் பிரிவு அலுவலர்களும், வாக்குச் சாவடி உள்பகுதியில் மைக்ரோ பார்வையாளர்களும் நியமிக்கப்படுவார்கள்.

தேர்தலை முன்னிட்டு வாக்கு பதிவு மையங்களில் பலத்த காவல் பாதுகாப்பு போடப்படும். பதற்றமான, மிக பதற்றமான வாக்கு சாவடிகளில் கூடுதல் காவல் பாதுகாப்பு அளிக்கப்படவுள்ளது.

..2..

பதற்றம், மிக பதற்றம் வாக்கு சாவடிகளை ஜாதி, வகுப்பு, அரசியல் ஆகிய மூன்று பிரிவுகளை கொண்டு கண்டறியப்பட்டுள்ளது. தேர்தல் பணிக்காக வாக்கு பதிவு மையங்களுக்கு 15 ஆயிரம் பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். வாக்காளர் பட்டியல் 100 சதவிகிதம் சரிபார்க்கப்பட்டு உள்ளது. இதில் வாக்காளர் சரி பார்க்கும் போது ஆள் இல்லாமை, உடல் நலம் குன்றியவர்கள், வேறு இடத்திற்கு மாறுதலில் சென்றவர்கள் ஆகியோரின் பட்டியல்களும் சரிபார்க்கப்பட்டு வாக்கு பதிவின் போது அவர்களின் பட்டியல் அந்தந்த வாக்கு பதிவு அலுவலர்களுக்கு அனுப்பப்படும்.

தேர்தல் பிரச்சாரங்கள் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி, நகரமாக இருந்தாலும், கிராமமாக இருந்தாலும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை தேர்தல் பிரச்சாரம் செய்யலாம். இரவு 10 மணிக்கு மேல கண்டிப்பாக பிரச்சாரம் செய்யக்கூடாது.

தமிழக அரசு விளம்பரம் சட்டத்தின்படி பொதுமக்கள் நடமாடக்கூடிய வழிகளில் அனுமதி பெற்றோ, அனுமதி பெறாமலோ விளம்பரங்கள் வைக்கக்கூடாது.

அரசு சுவர்களிலோ, தனியார் சுவர்களிலோ, விளம்பரங்கள் செய்யவோ, எழுதவோ கூடாது என்றும், தேர்தல் விதிமுறை வேலூர் மாவட்டத்தில் சரியாக பயன்படுத்தப்படுகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவரும் வேலூர் நாடாளுமன்ற தேர்தல் அதிகாரியான திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப, அவர்கள் மாநில தேர்தல் ஆணையர் திரு.நரேஷ்குப்தா, இ.ஆ.ப., அவர்களுக்கு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் போது கூடுதல் ஆட்சியரும் அரக்கோணம் நாடாளுமன்ற தேர்தல் அதிகாரியுமான செல்வி.ஆ.சுகந்தி, தேர்தல் வட்டாட்சியர் திரு.என்.ராஜேந்திரன், உதவியாளர் திரு.விஜயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர் - 9.